



மதுரையில் கட்டப்பட்டுள்ள, கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை முதலமைச்சர் அவர்கள் ஜூலை 15–ஆம் தேதி திறந்து வைக்கவுள்ளார். இந்நிலையில் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பி.மூர்த்தி ஆகியோர் நூலகத்தில் நடைபெறும் இறுதி கட்டப் பணிகளையும், ஆயுதப்படை வளாகத்தில் நடைபெறும் திறப்பு விழாவிற்கான அரங்கம் அமைக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

### ஆளுநரின் அரசியல் சண்டித்தனம் தி.மு.க. ஆட்சிக்கு எதிரானது என்பதைவிட,

# தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான ஓர் அரசியல் வன்மம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூலை 13 -

ஆளுநரின் அரசியல் சண்டித்தனம் தி.மு.க. ஆட்சிக்கு எதிரானது என்பதைவிட, தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான ஓர் அரசியல் வன்மம்; நமது அரசமைப்புச் சட்டத்தில் நமக்கு நாமே வழங்கிக் கொள்ளும் அதிகாரமான, மக்கள் அதிகாரம் பொங்கி எழுந்தால், தான்தோன்றித்தனம் அதன்முன் காணாமற்போகும் என்பதே ஆளுநர் ரவி உணர்ந்துகொள்ள வேண்டிய பாடம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டு ஆளுநரான பச்சை ஆர்.எஸ்.எஸ்., மதவெறி உயர்ஜாதி மனப்பாங்குடன் (இவர் பீகாரின் 'பூமி' கார் பிராமணர் என்ற மனப்பாங்குடனோ என்னவோ) தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. ஆட்சிக்கு எதிராகவே அனுதினமும் ஒத்துழையாமை போட்டி அரசு சம்பந்தமில்லாத விஷயங்களைப் பேசுவது பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவி நியமனங் களில் சட்ட மீறலை வற்புறுத்தியும் நிரப்பிடாமல் அப்பதவி காலியாகவே உள்ள நிலை (ஓர் எடுத்துக்காட்டு, கோவை பாரதியார் பல்கலைக் கழகம்) சட்டப் பேரவையில் நிறைவேற்றப் பட்ட மசோதாக்களில் சுமார் 13 மசோதாகளுக்கு ஒப்புதல் அளிக்காமல், மாதக் கணக்கில் கிடப்பில் போட்டு வைத்தும், ஊழல் செய்தவர்களுக்கு (மேனாள் அமைச்சர்கள்) எதிராக வழக்குப் போட அனுமதி வழங்குவதையும் தவிர்த்து வருவதோடு, கோப்பே வரவில்லை என்று பொய் சொல்லி, சட்ட அமைச்சரின் மறுப்பு கோப்பை இராஜ்பவன் பெற்றதற்கு ஆதாரம் உண்டு என்ற பதிலடிபற்றியும் வாய் திறக்காமல் மவுனம்; அமைச்சர் செந்தில்பாலாஜி விஷயத்தில் ஆப்பசைத்து, ஆழந்தெரியாமல் காலை விட்டு, டில்லி மேலிடத்தின் குட்டுகளையும் பெற்றுள்ளார்.

குழந்தை மணம் செய்து கொண்டதை பெருமையோடு பதிவு செய்த 'விசித்திர மனிதர்!'

அதற்குமுன் உச்சநீதிமன்றத்தின் குட்டினையும் பேரறிவாளன் வழக்கில் பெற்றவர் இந்த அரசமைப்புச் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் ஆளுநர் ஆர்.என்.ரவி என்ற குழந்தை மணம் செய்து கொண்டதை பெருமையோடு பதிவு செய்த 'விசித்திர மனிதர்' இவர்!

இந்த ஆளுநர் அந்தப் பதவிக்குரிய தகுதியுடன் நடந்துகொள்ள மறுப்பவர் என்பதை அடுக்கடுக்கான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டி, அவரை உடனடியாக மேதகு குடியரசுத் தலைவர் திரும்ப அழைக்க முன்வரவேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் "பொறுத்தது போதும்' என்று பொறுமை கடந்த நிலையில், ஒரு நீண்ட கடிதத்தை குடியரசுத் தலைவர் மேதகு திரவுபதி முர்மு அவர்களுக்கு எழுதியுள்ளார்.

**எந்த நிலையையும் சந்திக்கத் தயார்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!**

அதோடு 9.7.2023 அன்று பகிரங்கமாக ஒரு திருமண மேடையில் பேசும்போது, தி.மு.க. ஆட்சிக்கு எதிராக பல திட்டங்களைத் தீட்டவே இப்படி ஓர் அரசியல் அடாவடித்தன அலங்கோலம் அன்றாடம் அரங்கேறி வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டிப் பேசியதோடு, தாங்கள் எந்த நிலையையும் சந்திக்கத் தயார் என்று முழங்கியுள்ளார்!

ஆளுநரின் அரசியல் சண்டித்தனம் தி.மு.க. ஆட்சிக்கு எதிரானது என்பதைவிட, தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான ஓர் அரசியல் வன்மம்; காரணம், காவியை காவிக் காரர்களை தமிழ் மண் திராவிட மண் பெரியார் மண் சமூகநீதி சமத்துவ மண் அனுமதிக்க மறுப்பதல்லாமல், தென்னாட்டிலிருந்தே விரட்டுவதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வருகிறதே என்ற ஆத்திரத்தால் தமிழ் மக்களுக்கு விடப்படும் அறைகூவல் இது! அதைத் தாண்டியும், பதவிப் பிரமாணம் எடுத்த அரசமைப்புச் சட்டத்தின் மாண்புகளையும், அது வற்புறுத்தும் விழுமியங்களையும் காலில் போட்டு மிதிப்பதாகவே கருதப்படல் வேண்டும்!

**குடியரசுத் தலைவருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்!**

எனவேதான், இன்னமும் அந்த அறவழி முறையிலேயே நமது 'திராவிட மாடல்' ஆட்சியின் ஒப்பற்ற முதலமைச்சர் குடியரசுத் தலைவருக்குக் கடிதம் என்பதை, அரசமைப்புச் சட்ட மாண்புப்படி எழுதியுள்ளார்!

"அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்" என்பதை காலம் உணர்த்திட வைப்பது உறுதி!

நமது அரசமைப்புச் சட்டத்தில் நமக்கு நாமே வழங்கிக் கொள்ளும் அதிகாரமான, மக்கள் அதிகாரம் பொங்கி எழுந்தால், தான்தோன்றித்தனம் அதன்முன் காணாமற்போகும் என்பதே ஆளுநர் ரவி உணர்ந்து கொள்ள மறுக்கும் பாடம்!

**மக்கள்தான் ஆட்சியின் காவலர்கள்!**

'We the People' இதுதான் முக்கியம் புரிந்து கொள்ள வேண்டும் புரியாதவர்களுக்குப் புத்தி போதிப்பவர்கள் அரசமைப்புச் சட்டப்படியே,

மக்கள்! மக்கள்!! மக்கள்!!! அவர்கள் நம் ஆட்சியின் காவலர்கள் டில்லி ஏவலரே புரிந்து செயல்படுவீர்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மணலி – திருவொற்றியூர் மண்டலங்களில்

# பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு பணிகள்!

## ஆணையாளர் ஜெ.இராதாகிருஷ்ணன் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, ஜூலை 13-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திருவொற்றியூர் மற்றும் மணலி மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், மியாவாக்கி அடர்வன காடு, சூரிய தகடுகள் (Solar panel), புதிதாக கட்டப்படவுள்ள பள்ளி கட்டிடங்கள் போன்ற பல்வேறு பணிகளை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் (11.07.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மண்டலம், வார்டு20, மணலி மண்டல அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்தடுகளைப் பார்வையிட்டார்.

மேலும், மியாவாக்கி அடர்வனக் காட்டினை ஆய்வு மேற்கொண்டு அங்குள்ள இடத்தினை பசுமையாகவும், தூய்மையாகவும் பராமரிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வார்டு22, தேவராஜ் தெருவில் இயங்கி வரும் சென்னை உயர்நிலைப் பள்ளியில் கட்டப்படவுள்ள புதிய பள்ளிக் கட்டடத்தினையும், வார்டு21ல் பாடசாலை தெருவில் நடைபெறும் பள்ளி கட்டடப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அங்கு பயிலும் பள்ளி மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

மேலும், மணலி மண்டலம், வார்டு18ல் 200 அடி சாலையில் புதிதாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளை ஆய்வு மேற்கொண்டு பணிகளைத் தரமாகவும், பாதுகாப்புடனும், ஒருங்கிணைந்த துறை அலுவலர்களுடன் இணைந்து விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், மணலி மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, திருவொற்றியூர் மண்டலம், வார்டு 4க்குட்பட்ட பகுதியில் உள்ள மயான பூமியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மணலி எக்ஸ்பிரஸ் சாலை, ஜோதி நகர் மற்றும் சடயன்குப்பம் நெடுஞ்சாலையில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளை கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் நேற்று முன்தினம் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண் டார்.

இந்த ஆய்வின்போது, வடக்கு வட்டார துணை ஆணையர் எம்.சிவகுரு பிரபாகரன், மணலி மண்டலக்குழுத் தலைவர் ஏ.வி.ஆறுமுகம், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.


**ஈரோடு மாநகராட்சி**

**ஒப்பந்தப்புள்ளி அழைப்பு**

ந.க. எண். இ1 / 3553 / 2023. நாள் : 10.07.2023.

1. மாநில நிதிக்குழு ஆணையம் (SFC-Arrear) 2023-24ன் கீழ் ஈரோடு மாநகராட்சியில் 13 சிப்பங்கள் சாலை பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
2. குறைந்தப்பட்சமாக ஒரு சிப்பத்தின் மதிப்பு **ரூ.30.84 லட்சம்** மற்றும் அதிகபட்சமாக ஒரு சிப்பத்தின் மதிப்பு **ரூ. 244.04 லட்சம்** ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை **www.tntenders.gov.in** இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** இணையதள முகவரியில் **13.07.2023 முதல் 28.07.2023 வரை** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் **19.07.2023 அன்று காலை 11.00 மணியளவில்** ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.
6. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் **28.07.2023 அன்று மாலை 3.00 மணி வரை** மட்டும்.
7. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **28.07.2023 மாலை 3.30 மணி.**
8. ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.

**ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி.**

**செ.ம.தொ.இ/3601/ஒப்பந்தப்புள்ளி/2023**

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."**


# ஆளுநரா? ஆடுநரா? ஆணவரா?

**ஆ**ட்டுக்குத் தாடியாகும்
ஆளுநர் பதவியென்று
நாட்டுக்கோர் நற்கருத்தை
நவின்றவர்
அண்ணாதான்!

ஏட்டிலே வரைந்திட்ட
எழிலான சுரைக்காய்தான்
கூட்டுக்கும் ஆகாது
குழம்புக்கும் உதவாது
வாட்டவும் முடியாது
வறுக்கவும் இயலாது!

வீட்டுக்கு மேல்படரும்
வெண்பனிப் படலந்தான்;
சூட்டுக்குத் தாங்காது
சூரியன்முன் தங்காது!

மாட்டுக்குத் திமில்போல
மழகளிற்று வால்போல,
காட்டுக்கு வேலிபோல,
கனலுக்குப் புகைபோல,
பாட்டுக்கோர் அசைபோல,
பட்டுடைக்குச் சுங்குபோல,
பூட்டுக்குச் சாவியைப்
போடுகின்ற வளையம்போல்
கோட்டுக்குப்
பொத்தான் போல்
கோபுரத்துப் பொம்மைபோல்
காட்சிக்குத் தோன்றுகின்ற
'கனவானே' ஆளுநர்!
ஆட்சிக்குக் கட்டாயம்
அச்சாணி அவரல்லர்!
சாட்சியாய் இருப்பவர்;
தமக்குரிமை இலாதவர்;
மாட்சிமை தருவதொரு
மரபன்றி வேறில்லை!

ஆட்டுகிற ஆட்டத்திற்கு
ஆடுகிற ஆளுநர்
ஓட்டுகிற இடத்திலே
உட்கார உவக்கலாமோ?
போட்டிக்கோர் அசைவற்ற
பொம்மைதான் வரலாமோ?
ஏட்டிக்குப் போட்டியாய்
ஏறுமாறாய்ப் பேசியே
காட்டுவதோ அறியாமை;
கண்ணிருந்தும்
தெரியாமை!

ஈட்டியும் பாயுமோ
எய்யாமல் ஒருவர்தான்!
ஓட்டையுள்ள பானையில் நீர்
ஊற்றினால் நிற்குமா?
சேட்டைதான் செல்லுமா?
சிங்கத்தைத் தள்ளுமா?

முதல்வருக்கு எதிராக
மோடிமத்தான் ஆகின்றார்;
பிதற்றலென ஆனதும்
பின்வாங்கிப் போகின்றார்;
சதமடித்த தாய்எண்ணித்
தடிக்கம்பைச் சாய்க்கின்றார்;
மதம்பற்றிப் பேசியே
மாறுபாட்டைச் சாற்றுகின்றார்!

நுதல்வியர்க்க ஒவ்வொரு
நொடியுமே முட்டுகின்றார்;
பொதிபொதியாய்ப்
பொய்களைப் புனைந்திங்கே
கொட்டுகின்றார்;
சதிகார வேடந்தான்
சாயமின்றிக் கட்டுகின்றார்;
அதிகாரம் இருப்பதாய்
அறியாமை சுட்டுகின்றார்;
குதிகாலும் இல்லாமல்
குன்றேற எட்டுகின்றார்;
புதிராகப் பேசுவதாய்ப்
புன்மையே சொட்டுகின்றார்;
இதிகாசம் புராணங்கள்
இழிவுகளை ஒட்டுகின்றார்;
மதிகுழம்பிப் போனதாலோ
மருட்சியில் சுற்றுகின்றார்;
நிதம்ஒரு காகிதவாள்
நிழலினை வெட்டுகின்றார்;
விதியெனும் ஆப்பினை
வேகமாய் அசைக்கின்றார்;
கதியென்ன ஆகுமென்னும்
கதைமுடிவை
மறந்துவிட்டார்!

அறியாமல் செய்கின்றார்
ஆளுநர் என்பதெலாம்
அறியாதார் சொல்வதாம்;
அரசியல் சட்டத்தை
முறியாமல் முறிக்கின்றார்;
முரண்டுதான் பிடிக்கின்றார்!
அறிவுள்ளோர் செய்வாரோ?
ஆய்ந்துதான் பாராரோ?

நெறியின்றிப் பேசுகின்றார்;
நீர்க்கோலம் போடுகின்றார்;
பறிப்பதே உரிமைமலர்
பணியாகக் கிடக்கின்றார்;
மறிப்பதே வேலையாக
மாநிலத்தை முடக்குகின்றார்;
சிறியன எண்ணுகின்றார்;
தீயதே பண்ணுகின்றார்;
கறுப்பெல்லாம்
வெள்ளையென்றும்
காரிருளே பகலென்றும்
விருப்பம்போல் பேசுகின்ற
விகடகவி ஆகின்றார்!
இருப்பிடத்திற் கேற்றபடி
இயங்கத்தான் தெரியாமல்
இரும்படிக்கும் இடத்திலே
ஈயாகப் பறக்கின்றார்!
கருத்துகள் காலத்தின்
கழிவென அறியாமல்
புரிநூலார் என்பதனால்

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

புராண இதி காசங்கள்
தருப்பைகள் சனாதனம்
சாலவும் சிறந்ததென்று
செருப்பினைத் தலையேந்தும்
சித்தந்தான் கலங்கினாற்போல்
நெருப்பணைக்க நெய்யூற்றும்
நிலைமையே வளர்க்கின்றார்!

குறும்புதான் என்றிவற்றைக்
கொள்ளவும் முடிவதில்லை;
துரும்புதான் தொலைகவெனத்
தள்ளவும் ஒடிவதில்லை;
தருக்குதான் எனும்போது
தாக்காமல் விடுவதில்லை!

வெறிவந்தால் குன்றுமேல்
விலாநோக முட்டுவரோ?
பொறிவைத்துப்
பின்ஒருவர்
போயதிற் சிக்குவரோ?
உறியடியில் காலில்லார்
ஓரடியும் ஏறுவரோ?
குறிவைத்த கண்ணிலான்
கூத்தினை அறியாரோ?

எறும்புதான் யானையை
இடிக்கின்ற கதையன்றோ?
இரும்புதான் என்றெண்ணின்
ஈர்க்குச்சி வதையன்றோ?
சிரங்குற்றோன்
சொரிந்திடின்
சீரழியும் சதையன்றோ?
அரங்கந்தான் சிரிக்கின்ற
ஆளுநர் கதையன்றோ?

துஞ்சுபுலி இடறியே
துயர்ப்படும் சிதடன்போல்
பஞ்சணையில் தீவைத்துப்
படுத்துருளும் அசடன்போல்
கொஞ்சமும் அரசியல்
நாணத்தைக் கொள்ளாமல்
கிஞ்சிற்றும் அதிகாரம்
கிடையாத ஆளுநர்தான்
தஞ்செயல் தெரியாமல்
தடுமாறி விழுகின்றார்!

வெஞ்சமர்த் தேர்தலில்
வெற்றித்தேர் செலுத்திடும்
செஞ்சுடராம் முதல்வரின்
செயல்களுக்கு எதிராக
வஞ்சகம் புரிவதும்
வாய்மையைக் கொல்வதும்
நஞ்சினைப் பெய்வதும்
நாட்டாமை செய்வதும்
விஞ்சிடின் என்னாகும்?
வீழ்ச்சிதான் என்றாகும்!

ஒன்றிய அரசுதான்
ஒருநாடு, ஒருமொழி
ஒன்றாட்சி ஒருமதம்என்று
உருவாக்கி உரிமைகளைக்
கொன்றிட முனைந்திங்கே
கொடுங்கோலை ஏந்தியே
வென்றாட்சி செய்வோரை
வீழ்த்திடும் சூழ்ச்சியில்
நன்றியுடன் ஆளுநர்கள்
நடத்துகின்றார் வேட்டைகள்;
குன்றிய உள்ளத்தார்
கொடுக்கின்றார்
சேட்டைகள்;
இன்றவர் செயல்களால்
இடுகின்றார் ஓட்டைகள்;
இடிபடுமோ ஒருநாளில்
இந்தியாவின் கோட்டைகள்!

மன்றிலே மாண்பிலார்
மக்களிடம் மதிப்பிலார்
குன்றேறி விட்டதனால்
குன்றெலாம் தமக்கென்பார்
ஒன்றிலாது ஓடவேண்டும்;
ஒப்பாரி பாடவேண்டும்!
"குன்றுவர் குன்றிசெயின்"
குறள்இவர்
நாடவேண்டும்!

தின்றிட எதையுந்தான்
தெவிட்டாதார் இடத்திலே
நன்றிட முயன்றாலோ
நாறுமே இவருக்கு!
வென்றிட வழியின்றி
விலாஒடிந்த பேர்வழிகள்
சென்றிடப் போக்கின்றித்
திரிகின்ற மார்அடிகள்
குன்றிடம் மோதுகின்றார்;
குப்புற முடிவார்கள்!
அன்றுவரை ஆளுநர்தான்
ஆடட்டும் ஆட்டங்கள்;
பின் அவரே எடுத்திடுவார்
பிடரிபடும் ஓட்டங்கள்!
நன்றுணர்ச்சி நாடெல்லாம்
நாள்தோறும் மூட்டுங்கள்;
வென்றெழக் கூரிய
வித்தகம் தீட்டுங்கள்!

குஞ்சினை ஏவியே
கொக்கரிக்கச் செய்கின்ற
வஞ்சனை ஒன்றியத்தின்
வாலான ஆளுநர்
நெஞ்சுரம் கொள்வது
நீக்கமுடி யாதென்று!
குஞ்சரம் ஊர்வோரும்
கூனியே நடப்பரெனும்
செஞ்சொல்லை அறியார்கொல்!
செயலினை மாற்றார்கொல்!
மஞ்ஞையென எண்ணியே
வான்கோழி ஆடலாமா?
பஞ்சுதான் காற்றோடு
பந்தயம் போடலாமா?
நெஞ்சிதனைக் கொண்டு இவர்
நேர்மையை நாடலாமே!
அஞ்சிடார் தம்மையே
அரவணைத்துக் கூடலாமே!
மிஞ்சிடாது தமையுணர்ந்து
மேன்மையைத் தேடலாமே!
விஞ்சிட நினைப்பதினும்
விட்டுவிட்டு ஓடலாமே!
துஞ்சிடார் தமிழரென்றும்;
தொலைத்திடார்
உரிமையொன்றும்!
அஞ்சிடார் அறத்தினாலே
அடக்குவார் கொடுமையின்றும்!


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 9** ம.அ.9.ந.க.எண்.இ1/9502/1/2022

மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது

**இராஜ்யசபா நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ்**

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரின் பதிவு நிலை |
|---|---|---|---|
| ம.அ.9.ந.க.எண்.இ1/9502/1/2022 மண்டலம் - 9,ல் பகுதி -27, வார்டு எண்.12ல் உள்ள இராஜாஜி நகரில் (கஜபதி தெரு) புதிய நவீன வசதியுடன் கூடிய சமூக நலக்கூடம் கட்டும் பணிகள் (1,தரைதளம் 2, முதல் தளம், 3, இரண்டாம் தளம்) மூன்று பணிகள் | **பணியின் மதிப்பு ரூ. 83.34 இலட்சங்கள் முதல் ரூ. 125 இலட்சங்கள் வரை** | **பணியின் மதிப்பில் 1% சதவீதம்** | **முதல் வகுப்பு** |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **27.07.2023 மாலை 3.00 மணி**

ஒப்பப் படிவங்கள் **https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.

இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **28.07.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 3605 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மா.வ.அ/மண்டல அலுவலர் மண்டலம் - 9**

**சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்**



தமிழ்நாடு அரசு

**மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ஓ.அ.எண். 06 / 2023 - 24 / தவஅ / நாள்: 10.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, **மதுரை** வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2021-22** தலைப்பின் கீழ் **பழனி (நெ) க(ம)ப** கோட்டம் சார்ந்த பணிகளுக்கு **இணைய வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 31.07.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **17.07.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**செ.ம.தொ.இ / 3595/ ஒப்பந்தப்புள்ளி / 2023**

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம்.**

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**



தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.08/2023-2024/தவஅ/ நாள் : 10.07.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம் அவர்களால், காஞ்சிபுரம் (நெ), க(ம)ப கோட்டம் சார்ந்த சி.எம்.ஆர்.டி.பி. 2021-22 (1-துணை பணி) **இணைய வழியில்** மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **31/07/2023** பிற்பகல் 12.30 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **13/07/2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 3557 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப சென்னை வட்டம்.**

**சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்**